RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2026

# சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வாழ்வியல் நெறிகள்

சோபனா தர்மேந்திரா [அ,*]

[அ] நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# Physiological norms in Silappatikaram

Shopana Tharmenthira [a,*]

[a] Department of Dance, University of Jaffna, Jaffna, Sri Lanka.

Corresponding Author:
shopanamathu@gmail.com

Received : 30-12-2019
Accepted : 09-02-2020

**ABSTRACT**

Silappatikaram an epic poetry was written by Ilanko Adikal. Silambu and Context (Athikaram) are combined and becomes Silappatikaram. The story of Silmba (Anklet) is therefore called Silappatikaram. It is called the Citizen's Epic because it was sung by ordinary people like Kovalan and Kannaki. It is the book that makes the life of the people very clear. Individuality, Family, Relative, Community Membership, Citizenship are Physiological Sites and characteristics that human beings need to protect, tasks to perform, and the norms by which an ordinary man can live in everyday life. The integrity of the political life, the rise of femininity, the belief in morality are the high principles of the Tamil people; Silappatikaram explains these. It persuades moral principles through fiction. In this way, it is considered to be the study of the Physiological norms of these People's through dance.

**Keywords:** Silappatikaram, Ilanko Adikal, Kannaki, Physiological

## முன்னுரை

இளங்கோவடிகளால் எழுதப்பட்ட காவியம் சிலப்பதிகாரமாகும். சிலம்பு மற்றும் அதிகாரம் இணைந்து சிலப்பதிகாரமானது. சிலம்பினால் உண்டான கதை ஆதலால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. கோவலன், கண்ணகி போன்ற சாதாரண மனிதர்களை வைத்துப் பாடப்பட்டதால் இது குடிமக்கள் காவியம் என அழைக்கப்படுகிறது. நாட்டு மக்கள் வாழ்வியலைத் தெள்ளத் தெளிவாகத் தருவது இந்நூலாகும்.

தனிமனித நிலை, குடும்பநிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்கள் வாழ்வியலாகவும் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய பணிகள், சாராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய வழிமுறைகள் வாழ்வியல் நெறிகளாகவும் உள்ளன. அரசியல் வாழ்வில் இருந்த சீர்மை, பெண்மையின் உயர்வு, அறத்தின்பால் நம்பிக்கை இம்மூன்றும் தமிழ் மக்களின் உயர்ந்த கோட்பாடுகள.; இவற்றைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. கதைப் பாத்திரங்கள் வாயிலாக

அறக் கோட்பாடுகளை வற்புறுத்துகிறது. இந்த வகையில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆடல்கள் இம்மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துக் காட்டுவதை ஆய்வதாக இவ்வாய்வு அமையப்பெறுகிறது.

## ஆடல் அறிமுகம்

ஆடல் என்பது "ஆடு" எனும் வினையடிச் சொல்லில் இருந்து வந்ததாகும். நடனம், நடம், நட்டம், நாட்டியம் எனும் சொற்களுக்கு "நடு" என்பது வேர்ச்சொல் ஆகும். காலை நட்டு ஆடுவதால் நடனம் எனப் பெயர் பெற்றது.

பரதம் என்னும் வேர்ச் சொல் "பர" என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியது. பர என்றால் விரிதல், பரத்தல், பரவல், அண்ட என்னும் பொருளாகும். பரந்துபட்ட அடிகளால் ஆடுதல் அல்லது பரவி ஆடுதல் எனும் ஆடலினைச் செய்தவர் பரத மக்கள் ஆவார். பரந்து ஆடுதலே பரதம் என்பதை சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகிறது.

"பரவிய சாந்தி அன்றியும்
பரதம் விரவிய விநோதம்"

மேலும் கடலாடுகாதையில் பரத மகளிருடன் ஆடவர்கள் நீர் விளையாடலைச் செய்து மகிழ்ந்தனர் என்று கூறப்படுகிறது. பரத மகளிர் என்போர் ஆடுகளப் பெண்கள் ஆவார். இதிலிருந்து பரதம் என்பது தமிழர்களின் நடனக்கலை என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது (Amy Tikkanen, 2006; Prabha Rani, 2011; Ate, 2014).

## தண்டியம் பிடித்தல்

இது நாட்டியக்கலை பயிற்றுவிக்கத் தொடங்கும் போது செய்யப்படும் ஒரு வகை வழிபாடு. மாதவிக்கு ஐந்து ஆண்டில் தண்டியம் பிடித்து ஏழாண்டு இயற்றுவித்துப் பன்னீராண்டில் சோழவேந்தன் கரிகாற்பெருவளந்தானுக்கு அரங்கேறிக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. தண்டியம் என்பது நட்டுவன் வைத்திருக்கும் தாளக்குச்சியாகிய தண்டினால் தட்டப்படும் தாளத்தின் தன்மை. இதனை நடன ஆசான் பூசை செய்து நாட்டியம் பயில இருக்கும் நங்கையின் கையில் கொடுத்து வணங்கிக் கொள்ளுமாறு செய்வதாகும். "தண்டியம் பிடித்தல்" என்பது நல்ல நாளும் நல்ல ஓரையும் பார்த்து இதனைச் செய்விப்பார்கள். இது நடனம் கற்றுக் கொள்பவரின் ஐந்தாவது வயதில் தொடங்குகிறது. நட்டுவன் தாள முழக்குகளை நட்டுவன் சொற்கட்டுக்களை வாயால் சொல்லிக் கொண்டு தட்டிக்காட்ட, அச்சொற்கட்டிற்கு அடி பெயர்த்து தோள் முதலிய உறுப்புக்கள் பெயர்த்து ஆடுதல் பயிற்றுவிக்கப்படும். நட்டம் என்பது தாளத்திற்கு ஆடுதல், இப்பயிற்சிக்கு பின்னர் பாடலுக்கு ஆடும் நடனம், நாட்டியம் பயிற்றுவிக்கப்படும். இவ்வாறு ஐந்தாண்டுகள் தொடங்கி பன்னிரண்டாம் வயது வரை ஏழு ஆண்டுகள் கற்பிக்கத்தக்க நீண்ட நல்ல பாடத்திட்டம் நடன ஆசிரியர்பால் இருந்தது. இதனை பின்வரும் வரிகள் செப்புகின்றன அவை வருமாறு

"தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை
ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றில் ஒன்றுகுறை படாமல்
ஏழாண் டியற்றியோர் ஈரா(று) ஆண்டில்
சூழ்கழல் மன்னற்கு காட்டல் வேண்டி"2

இதில் இருந்து வரண்முறையோடு கற்றல் ஒழுங்கு நெறியையும், சமய நம்பிக்கையையும் மாதவி கற்ற ஆடல் மூலம் வாழ்வியல் நெறிப்படுத்தப்பட்டதை அறிந்து கொள்ள முடிகிறது.

## தலைக்கோல்

தலைக்கோல் என்பது நடன நங்கையின் திறம் கண்டு அளிக்கப்படும் பரிசு ஆகும். வேந்தன் கலை மாதின் சீரிய நடனத்தை அரங்கில் கண்டு பாராட்டி தலைக்கோல் பரிசில் கொடுப்பது வேத்தியலாகும். இதில் பெண்மையின் உயர்ச்சி, திறன், ஆற்றல் ஊக்கம் போன்ற வாழ்வியல் நெறிகளைக் காணலாம். ஒரு பெண்ணின் ஆடற் திறமைக்கு மன்னன் தலைக்கோல் பட்டமளிக்கிறான் என்றால் பெண்ணின் உயர்ச்சிக்கு ஆடற்கலை நிலைக்களமாகிறது. மன்னன் இக்கலைக்கு ஊக்கமளித்து பரிசளிப்பதில் அரசியல் சீர்மை இங்கு தெரிகிறது. மக்களின் வாழ்வியல் நெறிக்கு ஆடற்கலை நிலைகளமாய் நிற்பது தெளிவாகிறது.

## தோரிய மகளிர்

தோரிய மகளிர் நாட்டியம் முதலிய கலைகளை அரங்கில் ஆடி, வயதிலும் கலையிலும் முதிர்ந்தவர்களாக வாழும்போது இளங்கலைஞர்களின் ஆடல், பாடலுக்கு உதவிகள் புரிந்தனர். இவர்கள் தொன்மையான ஆடற்கலை நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்கள். இவர்களைப்பற்றி இளங்கோ குறிப்பிட்டுள்ளவை வருமாறு

"தொன்னெறி இயற்கைத் தோரிய
சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையில் பாடப்
பாடிய வாரத்து ஈற்றினின்று இசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிகள்"

மாதவியின் நடனத் தொடக்கத்தில் தோரிய மகளிர்கள், குழல், யாழ், தண்ணுமை முதலிய குயிலுவக் கருவிகளும் முதல் வார நடையிலும் இரண்டாம் வார நடையிலும் தாளம் தப்பாமல் பாடிக் கடவுளை வாழ்த்தினார்கள். தாளம் தப்பாமல் பாடினால் நாட்டின் நன்மைகள் பெருகும் என்பது அக்கால மாந்தரின் நம்பகமும் பற்றுறுதியுமாகும். இவற்றில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஆராயும் போது, மூத்தோர்கள் இளையவர்களிற்கு உதவிபுரிதலும், தமது கலையனுபவங்களை இளைய சந்ததிக்கு பகிர்வதையும், கூட்டு

முயற்சியால் இசை, நடனம் போன்ற கலையனுபவம் சிறக்கவும், இக்கலைகளின் சீர்மையான தன்மையால் நாட்டில் நன்மை நடக்கும் என்ற நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் வளர்வதற்கு இக்கலைகள் உன்னத நிலையில் இருந்து மக்கள் வாழ்வியலை வளம்படுத்தியுள்ளது என்பதை அறியலாம்.

## அவிநயம்

அவிநயம் இருபத்திநான்கு என சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. வெகுண்டோன், ஐயமுற்றோன், அழுக்காறு உடையோன், இன்பமுற்றோன், தெய்வமுற்றோன், ஞஞ்ஞை உற்றோன், உடன்பட்டோன், உறங்கினோன், துயில் உணர்ந்தோன், செத்தோன், மழைபெய்யப்பட்டோன், பனி தலைப்பட்டோன், வெயிற்றலைப்பட்டோன், தலை நோவு உற்றோன், அழற்றிறம்பட்டோன், சீதமுற்றோன், வெப்பமுற்றோன், நஞ்சுண்டோன், சிந்தைபட்டோன், துஞ்சாநின்றான், நாணமுற்றோன், வருத்தமுற்றோன், கண்நோவு உற்றோன் என்பவைகள் ஆகும். இவை வாழ்வியல் நடைமுறையில் (யதார்த்தத்தில்) உள்ள உணர்ச்சிகளை காட்டுகிறது. எடுத்துக்காட்டாக நகைச்சுவை அவிநயம் என்பது ஒலியுடன் சிரிப்பது, ஒலியின்றிப் புன்னகைப்பது என இரு வகைப்படும். ஒலிபட நகைப்பதை மிகைபடு நகை என்றனர். தான் பிறரைக் கண்டு, கேட்டு நகைப்பது ஒரு வகை, பிறர் தன்னைக்கண்டு, கேட்டு நகைப்பது இன்னொரு வகை. நகைப்பதை உண்டாக்குவது காட்சியும் கருத்துமாகும். பற்கள் வெளித்தெரிதல், முகம் கோணியிருத்தல், புருவம் நெரிதல், விலாப்புடைத்தல், கன்னங்குழி விழுதல், வாய் அகல்தல், உடல் குலங்குவது, கண் ஒளி வீசுதல் முதலியன நகையின் மெய்ப்பாடுகள் ஆகும். சிலப்பதிகாரத்தில் நகை என்னும் உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக நகைக்கூத்தைக் குறிப்பிடலாம். இக்கூத்து விதூடக்கூத்து, வசைக்கூத்து என்றும் கூறுவார்கள். வசைக்கூத்துள் "பல்வகை உருவமும் பழித்துக் காட்ட வல்லவனாதல் வசை எனப்படுமே" இவ்கைக் கூத்துக்கள் மூலம் களிப்பு, மகிழ்ச்சி மக்கள் வாழ்க்கையில் புலப்படுத்தியிருப்பதை அறியலாம்.

நடனத்தில் அவிநயம் செய்வதற்கு கைகளைப் பயன்படுத்துவர். இப்பயன்பாட்டினை ஒட்டி பிண்டி, பிணையல் என வகுத்தனர். பிண்டி என்பதை ஒற்றைக்கை என அடியார்க்குநல்லார் குறிப்பிட்டுள்ளார். இவை முப்பத்திமூன்று கை முத்திரைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொடிக்கை (பதாகை), முப்பாகக்கொடிக்கை(தரிப்பதாகை), கத்தரிக்கோல் அலருக்கை (கத்தரிக் கை), விளக்குக்கை(தூபம்), வளைவுக்கை (அராளம்), இளம்பிறைக்கை, கிளிமூக்குக்கை (சுகதுண்டம்), முட்டிக்கை ((முஷ்டி), நண்டுக்கை (கடாகாமுகம்), ஊசிக்கை(சூசி), தாமரைமொட்டுக்கை (பதுமகோசிகம்), சிற்றுரண்டைக்கை (காங்கூலம்), விளாம்பழக்கை (கபித்தம்), விற்பிடிக்கை, குடங்கை, அலர்தாமரை (அலர்பத்திரம்), தேனீக்கை(பிரம்மரம்), சேவற்கை (தாமரச்சூடம்), பேய்க்கை (பாசம்), மொட்டுக்கை (முகுளம்), பிண்டிக்கை, தெரிநிலைக்கை, மெய்நிலைக்கை, உன்னக்கை, மண்டலக்கை, சதுரக்கை, மான்தலைக்கை, சங்குக்கை, கருவண்டுக்கை, இலத்தைக்கை (இலதை), புறவுக்கை,

மகரமீன்கை, வலம்புரிக்கை. இவை தமிழ் மரபினுக்குட்பட்டது. தமிழ் மண்ணிற்கு உரிய பொருளோடு தொடர்புடைய செய்கைகள் என்று கொள்ளவேண்டும். சான்றாக தூபக்கை நாட்டியத்தில் தீபத்தை அபிநயத்துக் காட்டும் கைகளுள் ஒன்று. விளக்கு, தீபம் போன்ற பொருட்கள் மக்கள் மங்கள நிகழ்வுகளிற்கு பயன்படுத்தப்படும் பொருளாகும். இதனை சிலப்பதிகாரம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"தூப மென்பது துணியுங் காலை
விளங்கு கத்தரிகை விரலகம்
துளங்கும் என்ப துணி பறிந்தோரே"

இவை மனித வாழ்க்கைப் பழக்கவழக்கங்களையும், பயன்பாட்டையும், பண்பாட்டையும் பிரதிபலிப்பதை ஆடலின் அவிநய முத்தரைகளோடு அறியக் கூடியதாக உள்ளது.

## கூத்துக்கள்

மாதவியாடிய பதினொருவகைக் கூத்துக்கள் அல்லியம், குடக்கூத்து, மல்லாடல் என்பன திருமாலால் ஆடியது. பாண்டரங்கம், கொடுகொட்டி போன்றவை சிவனால் ஆடப்பட்டது. குடைக்கூத்து, துடிக்கூத்து என்பன முருகனால் ஆடப்பட்டது. மரக்கால் பார்வதி தேவியாலும், பாவைக்கூத்து திருமகளாலும் கடையம் இந்திராணியாலும் , பேடாடல் காமனாலும் ஆடப்பட்டது. இவை தெய்வங்களின் தனித்ததன்மையை ஆடல் மூலம் வெளிப்படுத்துவதன் மூலம் இறையுணர்வை ஏற்படுத்தி மக்கள் வாழ்வியலை வளப்படுத்தியிருக்கிறது. அநீதிகளுக்காக அழித்து நீதியை நிலை நாட்டுவதற்காக இறையவர்கள் ஆடிய ஆடல்கள்தான் இப்பதினொருவகை ஆடல்களாகும் (Jacob-Pandian, 1977; Elizabeth Rosen, 1975; Dhandayudham, 1975; Pandian, 2005).

கூத்துக்களில் துணங்கை, குரவை என்பன கூடியாடும் கூத்தாகும். இரு கைகளை மடக்கி, முடக்கிக் கொண்டு இரு விலாப்புறங்களிலும் அடித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆடும் கூத்து துணங்கையாகும். இவ்வாறு கைகளை முடக்கியடித்து ஆடுவதை இன்றும் குறவர் ஆடும் சிங்கிக்கூத்தில் காணலாம். குரவை என்பது 'குர" என்னும் வேர்ச் சொல்லில் இருந்து கோர்த்தல், சேரத்தல் எனும் பொருள் கொண்டது. இதனை "...கற்கடகக் கை கோஒத்..."6, "கோத்த குரவையு.....".7. எனும் வரிகள் மெய்ப்பிக்கின்றன. ஒருவர் வாழும் ஊரொடு ஒத்திசைந்து வாழ்தல் குடிமைப் பண்பாகும். இங்கு ஒற்றுமை, கூட்டு இயக்கம், மகிழ்ச்சி, குடிமைப்பண்பு என்பவற்றைக் இக்கூத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. திருமாலைக் குறித்து ஆடப்பெறும் குரவைக்கூத்தை இடைக்குல மகளிர் பெரும்பாண்மை நிகழ்த்துவர். பாண்டிய மன்னனினால் கொல்லப்பட் கோவலனின் இறப்பிற்கு பிற்பாடு மதுரை மாநகர்க்கு வரும் தீங்கினை உணர்த்த ஆங்கே துன்னிமித்தங்கள் நிகழந்தன. இந்நாளில் தமக்கு வரும் தீங்குகளை தெய்வங்களுக்கு சாந்தி எடுத்தலால் போக்கிக் கொள்ளலாம் என நம்பி வந்தனர். இக்கருத்துப் பற்றியே இடைக்குல மாதான மாதரியும் அவள் மகள் ஐயை என்பவளும் கண்ணகிக்கு எதிரில் இக்கூத்தினை எடுப்பித்தனர். உற்பாதசாந்திபொருட்டு ஆடல் என்பது

இறையருள் வேண்டிக் கூடியாடும் குரவைக்கூத்து, வர இருக்கும் பெரும் இடர்களை நீக்குவதற்காகக் கடவுளை வேண்டி, பணிந்து கூடி ஆடிய ஆட்டமாகும் இதனை "உற்பாத சாந்திப்பொருட்டு ஆடிய குரவை"8. எனும் வரிகள் மூலம் அறியலாம். மேலும் கண்ணகி பெருஞ் சினத்தால் மதுரையை எரித்த பின் நெடுவேள் குன்றத்து ஒரு வேங்;கை மர நிழலில் நின்ற போது அங்கும் குன்றக் குறத்தியர் கண்ணகிக்காக குரவைக்கூத்தாடினர். சமய நம்பிக்கைக்காகவும், மன உளைச்சலில் கோபத்தைத் தணிப்பதற்காகவும் ஆடல்கள் வாழ்வியல் நெறிகளாக அக்காலத்தில் திகழ்ந்திருக்கின்றன.

சாக்கையர் நடனம் அல்லது சாக்கையர் கூத்து என்பது கேரளத்தில் சாக்கையர் என்ற பிராமணப்பிரிவினர் சேரன் செங்குட்டுவன் முன்னால் ஒரு அர்த்தநாரீ நடனம் ஆடி அவனை அசத்திவிட்டனர். உடலில் ஒரு பகுதி பார்வதியாகவும் மற்றொருபகுதி சிவனாகவும் ஆடப்படும். அந்தப் பிராமண இளைஞன் ஆடிய ஆட்டத்தில் உடலின் பாதிப் பகுதி மட்டும் அசைந்தாடும். மறுபகுதி அசையாவண்ணம் இருக்கும் நடனமாகும9;. இது தனிமனித ஆளுமை, தன்னம்பிக்கை, ஆற்றல் என்பனவற்றை இந்நடனம் எடுத்துக்காட்டுகிறது.

## விருத்தி

விருத்தி என்பது நாடகத்தின் பொருட்தன்மையை விளக்கும் முறையைக் கூறுவதாகும். விலக்குறுப்பு என்பது பலவகைப்பட்ட கூத்துக்களிற்கும் நாடகங்களிற்கும் வேண்டியன சேர்த்தும் வேண்டாதன விலக்கியும் செயற்படுத்துவதற்கு அமைந்த உறுப்புக்கள் விலக்குறுப்புக்கள் எனப்படும். விலக்குறுப்புக்கள் பதினான்குவகைப்படும். அவற்றுள் ஒன்று விருத்தி ஆகும். விருத்தி நான்கு வகைப்படும். சாத்துவதி, ஆரபாடி, கைசிகி, பாரதி என்பனவாகும். சாத்துவதி என்பது அறம் பொருளாகத் தெய்வமானிடர் தலைவராக வருவதாகும். ஆரபாடி என்பது பொருள். பொருளாக வீர மானிடர் தலைவராக வருவது ஆகும். கைசிகி என்பது காமம் பொருளாகக் காமுகர் தலைவராக வருவதாகும். பாரதி என்பது கூத்தன் தலைவனாக நடன் நடிபொருளாகக் காட்டியும் உரைத்து வருவது ஆகும்.10 அறம், பொருள் இன்பம் எனும் வாழ்வியல் நெறிகளை கூத்தன் நடிக்கும் கூத்து மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆடவர் ஒருவரின் தலைமைத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

## முடிவுரை.

சிலப்பதிகார காலத்தில் இடம்பெற்ற தலைக்கோலிப்பட்டம் ஆடலில் தேர்ச்சி பெற்றோருக்கு வழங்கப்பட்டது. இம்மரபு தற்காலத்திலும் நடனத்தில் தேர்ச்சி பெற்றோர்களுக்கு கலை நிறுவனம், சபா, பல்கலைக்கழகங்கள் போன்றன பட்டங்களும், விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வருவதனைக் கருத்தில் கொள்ளலாம். தனிநபர் நடன நிகழ்ச்சி அரங்கேற்று காதையில் மாதவியால் ஆடப்பட்டதை சிலம்பு கூறுகிறது. இவ்வழக்கம் தற்காலத்தில் செம்மைப்படுத்தபட்டு அரங்கேற்றங்களாக தற்கால அரங்குகளில் மார்க்கங்களாக இடம்பெற்று வருவதை அறிந்துகொள்ளலாம். இறைவனின் தனித்துவச் செயல்களை வெளிப்படுத்தும் பதினொருவகைக் கூத்துக்கள் தற்காலத்தில் பரதநாட்டிய

அரங்கேற்றத்தில் இறை செயலையும், புகழையும் கீர்த்தனம் எனும் உருப்படியில் ஆடிக் காண்பிக்கப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் தமிழர் தம்வாழ்வியலில் உயர்நிலையில் ஆடல்கள் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. அறம், பொருள், இன்பம் என்னும் நெறிமுறைகளை விருத்தி என்பவற்றிற்கூடாகவும், ஒற்றுமை ஒழுங்கு, இறையுணர்வு, தலைமைத்துவம், ஆளுமை, பண்பாடு, யதாரத்த நடைமுறை, குடிமைப்பண்பு போன்ற வாழ்வியல் நெறிகளை சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆடல்கள் எடுத்துக்காட்டுவதை இவ்வாய்வினூடாக அறிந்து கொள்ளமுடிகிறது.

## References

Amy Tikkanen (2006) Silappathikaram. Encylopaedia Britannica.

Ate, L., (2014) O ra pakuti--a 'Single Part' of the Tamil Epic Cilappatik ram and its significance to the study of South Indian Vaisnavism, The Journal of Hindu Studies. Oxford University Press. 7 (3): 325–340. doi:10.1093/jhs/hiu027

Dhandayudham, R., (1975) Silappathikaram: the Epic, Indian Literature, 18(2) 24–28

Elizabeth Rosen, S, (1975) Prince ILango Adigal, Shilappadikaram (The anklet Bracelet), translated by Alain Damelou, Artibus Asiae. 37 (1/2) 148–150. doi:10.2307/3250226

Jacob-Pandian E.T., (1977) K Ishwaran (ed.). Contributions to Asian Studies: 1977. Brill Academic. pp. 56–57.

Pandian, M.S.S, (2005) Void and memory: story of a statue on Chennai beach front, Inter-Asia Cultural Studies, 6(3) 428-431.

Prabha Rani, (2011) When Kannaki Was Given a Voice, Studies in History, SAGE Publications. 27 (1) 1–20. doi:10.1177/025764301102700101.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License